O.S. No. 109/2022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 03.03.2026

DW1: ராவனேஸ்வரன் த/பெ– துரைச்சாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) நான் பழைய காலத்து SSLC படித்துள்ளேன். வாதிகளும், நானும் உறவினர்களா என்றால் உறவினர்கள் என்று கூற முடியாது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கொடிவழிக்கும், எங்கள் கொடிவழிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரை தயார் செய்ய வழக்கறிஞருக்கு நான் விபரம் சொன்னேன். நிரூபண வாக்குமூலத்தில் வாதிகள் வேண்டும் என்றே தாவா சொத்தின் மதிப்பை குறைவாக காட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன், எவ்வளவு மதிப்பு குறைவாக காட்டப்பட்டுள்ளது என சொல்லவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்துக்கள் 7 ஏக்கர் 64 செண்ட் ஆதியில் கோபால்சாமி நாயக்கர் மற்றும் அவரது சகோதரர் ராமசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2) வாதிகளின் பூட்டனார் 2012 ம் வருடம் தபசில் சொத்தில் 5 ஏக்கர் 7 செண்ட் கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல, ராமசாமி நாயக்கரிடம் கிரையம் வாங்கவில்லை. கோபால்சாமி நாயக்கரிடம் இருந்து கிரையம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.964/2 எனது மூதாதையர்களுக்கு கிரைய பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரிதான், வாதிகளுக்கும் சர்வே எண்.964/2 கிரைய பாத்தியப்பட்டது இல்லை. 1912 ம் வருடம் வாதிகளின் மூதாதையர்கள் கிரைய ஆவணம் 941/1912 ன் மூலம் அய்யாச்சாமி தேவர் தனது மகள் பேச்சியம்மாளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தனது அனுபவத்தில் உள்ள சொத்தை தனது மகளுக்கு கிரையம் கொடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

3) 1912 ம் வருட கிரைய பத்திரம் செல்லாது என்று இவ்வழக்கிலோ

அல்லது வேறு வழக்கிலோ சொல்லியுள்ளேனா என்றால் இதுவரை அந்த பிரச்சனை வரவில்லை என்பதால் சொல்லவில்லை. பிராதில் 1912ம் வருடம் பேச்சியம்மாள் பெற்ற கிரையத்தின் அடிப்படையில் தாவா சொத்து வாதிகளுக்கு கிடைக்கப்பெற்றதாக குறிப்பிட்டுள்ள போதும் அது குறித்து எதிர்வழக்குரையில் எந்தவித மறுப்பும் குறிப்பாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் என்ன வகையில் தவறுதலாக உள்ளது என எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, 1923ம் வருடம் பேச்சியம்மாள் தனது மகன் தங்கையா தேவர் வகையறாவிற்கு 3 ஏக்கர் 82 செண்ட் தானம் கொடுத்துள்ளதை மறைத்துள்ளனர். 10.09.1923ம் தேதிய தானசெட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.3ன் மூலமாக பாதி தெற்கு கடைசியில் 3 ஏக்கர் 82 செண்ட் தனது மகன் தங்கையாதேவர் வகையறாவிற்கு பேச்சியம்மாள் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் வாதிகளின் மூதாதையர்களுக்கு தாவா சொத்து கிடைத்துள்ளது குறித்து எதிர்வழக்குரையில் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சொத்து அளவு சரியாக இருந்ததால் சொல்லவில்லை. வாதிகள் யாரையும் உரிய தரப்பினர்களாக சேர்க்காமல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிபேராணை மனு தாக்கல் செய்தேன் என்றால் நான் தாக்கல் செய்யவில்லை, வாதிகள் தான் தாக்கல் செய்தார்கள். வாதிகள் தாக்கல் செய்த நீதிபேராணையில் உரிமையியல் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு பெற்று அதன் படி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனது நீதிபேராணையில் தான் அவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5) அவ்வாறு உத்தரவு பெற்ற 3 மாதங்களில் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கு காலாவதி

தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கு எந்த வகையில் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என குறிப்பாக எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் சங்கரலிங்க மூப்பனார், மாரியப்ப மூப்பனாருக்கு கொடுத்த கிரையத்தினை ரத்து செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், கிரையம் கொடுத்து 13 வருடம் கழித்து எவ்வாறு ரத்து செய்யப்பட்டது என குறிப்பிடவில்லை. 1944ம் வருட பத்திரத்தில் சங்கரலிங்க மூப்பனார் மகன் மாரியப்ப மூப்பனாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அடமான கடன்களை நாங்கள் திருப்பி கொடுத்தவிட்ட படியால் 1931ம் வருட பத்திரத்தை ரத்து செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல, தற்போது வரை மாரியப்ப மூப்பனார் பெயரில் பட்டா உள்ளது. 1931 ம் வருட பத்திரத்தில் 1944ம் வருட பத்திரத்தின் வாயிலாக ரத்து செய்யப்பட்டதாக 1931ம் வருட பத்திரத்தில் மேலெழுத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)